மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 ம் நாள் வியாழக்கிழமை

*******

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ராஜா | **அசல் வழக்கு எண்.** | - | 1/2024 |
| த/பெ. | - | பச்சையப்பன் | **வா.சா.** | - | 1 |
| வயது | - | 49 | | | |
| கிராமம் | - | சித்தலிங்கமடம் | | | |
| வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |
| தொழில் | - | விவசாயம் | | | |

18.09.2025.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து எனது தாத்தா அண்ணாமலை கவுண்டருக்கு எப்படி பாத்தியம் என்றால் அது அவருடைய பூர்வீக சொத்து. பூர்வீக சொத்து என்றால் அண்ணாமலை கவுண்டரின் தகப்பனார் சின்னசாமிக்கு பாத்தியானதா என்றால் சரிதான். சின்னசாமிக்கு எனது தாத்தா அண்ணாமலை, சாரங்கபாணி, நாராயணசாமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான்.

2.இவர்கள் மூவரும் பூர்வீக சொத்துகளை ஏற்கனவே பாகமாக பிரித்து கொண்டார்கள் என்றால் ஆமாம். பாகமான பிரித்து கொள்வதற்கு கூர் சீட்டு எழுதி வைத்துக்கொண்டார்கள் என்றால் ஆமாம். அந்த கூர்சீட்டில் எனது தாத்தா அண்ணாமலை கவுண்டருக்கு வழக்கு சொத்து பாகமாகவே ஒதுக்கப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது, ஆனால் 1972 பத்திரத்தில் உள்ளது.

3. கூர்சீட்டில் இருக்கும் விவரம் எனக்கு தெரியும், அதை சொன்னால் வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 30.03.1960 ல் எனது தாத்தா அவருடைய பிள்ளைகளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் வழக்கு சொத்து இந்த பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. 1960 ல் ஏற்பட்ட பத்திரத்தில்

அண்ணாமலைக்கு விடப்பட்ட பாகம் குறைவு என்றால் தெரியாது. அந்த பத்திரத்தை தாக்கல் செய்தால் இந்த வழக்கில் எனக்கு பாதிப்பு ஏற்படும் என்பதற்காக அதை தாக்கல் செய்யவில்லை என்றால் அடுத்த முறை அந்த ஆவணத்தை பார்க்கிறேன்.

5. 1972 ல் அண்ணாமலை மற்றும் அவருடைய பிள்ளைகளுக்கு இடையே ஒரு பாகப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். 1960 ல் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்துகளையும், இதர பொது குடும்ப சொத்துகளையும் சேர்த்து பாக பத்திரம் 1972 ல் ஏற்பட்டது என்றால் சரிதான்.

6. பொது குடும்ப சொத்துகள் என்று சொல்கிறேனே அந்த சொத்துகள் பிரதிவாதிகளுக்கு பாத்தியமான சொத்துகள் என்றால் ஆமாம், அண்ணாமலை கவுண்டர் 1972 ல் மூன்று பேருக்கும் பிரித்து கொடுத்துள்ளார். 1960 ல் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரப்படி நான் பட்டா மாற்றம் செய்தேனா என்றால் இல்லை, அந்த விவரம் எனக்கு 1972 ற்கு மேல் தான் தெரியும்.

7. 1960 ல் தான செட்டில்மெண்டும், 1972 ல் பாக பத்திரம் ஏற்பட்டுள்ள நிலையில் இடைப்பட்ட நாட்களில் நான் அதை பொறுத்து பட்டா மாற்றம் செய்துகொள்ளவில்லை என்றால் இல்லை, அரசாங்கத்தால் நத்தத்தை பிரித்த போது பட்டா கொடுத்தார்கள். நத்தம் பட்டா 1996 ல் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

8. 1972 லிருந்து 1996 பட்டா பெறும் வரை வழக்கு சொத்தை நான் அனுபவித்ததற்கு பட்டாவே, சிட்டாவோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ரெக்கார்ட் எல்லாம் அப்ப கிடையாது. 1 ம் பிரதிவாதி வாசுதேவன் ராணுவத்தில் பணிபுரந்தாரா என்றால் ஆமாம், அதற்கு படிப்பு தேவையில்லை, உடல் தகுதியிருந்தால் போதும்.

9. அவர் ஊரில் இல்லாததை தெரிந்து கொண்டு வருவாய் அதிகாரிகளிடத்து தவறான தகவல் தெரிவித்து 1996 ல் தவறாக பட்டா மாற்றி கொண்டேனா என்றால் இல்லை. அதனால் தான் யூ.டி.ஆர் -கு முன்பு எனது அனுபவத்தை குறிக்கக்கூடிய எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் 50 வருடத்திற்கு மேலாக வீடு உள்ளது, இன்னும் அதே வீட்டில் தான் குடி இருக்கிறோம்.

10. வீட்டு வரி, மின் இணைப்பு எந்த சர்வே எண்ணிற்கு உட்பட்டது என்பதை காண்பிக்க நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் மின்கட்டணம் கட்டுவதற்கும், தண்ணீர் வரி கட்டுவதற்கும் ரசீது கொடுப்பார்கள், அதை மட்டும் வாங்கி வைக்கிறோம், அதில் சர்வே எண்கள் குறிக்கமாட்டார்கள். 1972 பாக பத்திரத்தில் சி, டி பட்டியலில் சக்குபந்தியில் இந்த பிரதிவாதிகள் காண்பிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் ஆமாம், கோவில் இடத்தை அவரவர்கள் அனுபவிப்பதற்கு இடத்தை காண்பித்துள்ளார்கள்.

11. ஆனால் பிராதில் சொத்து விவரத்தில் இந்த பிரதிவாதிகளை சக்குபந்தியாக

காண்பிக்கவில்லை என்றால் காண்பித்துள்ளேன். பிராதில் சொத்து விவரத்தில் சொத்திற்கான நீள, அகலம் குறித்து எதுவுமே சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்து விவரத்தில் 238 சதுர மீட்டர் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் செட்டில்மெண்ட் பத்திரத்திலும், கூர் சீட்டிலும் சொத்து விவரத்தின் அளவு எங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் அது விடுப்பட்டிருக்கும், 1972 ல் அதை இணைத்துவிட்டார்கள்.

12. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் 2 வதாக காட்டப்படும் வீடு யாருடையது என்றால் முருகனுடையது. இரண்டு வீட்டிற்கும் நடுவில் கல்தூண் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சந்து வழியாக தான் பிரதிவாதிகள் அவருடைய பாக இடத்திற்கு போகிறார்கள் என்றால் அது பாகமே இல்லை, கோயில் இடம்.

13. வருவாய் துறையின் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சந்து பிரதிவாதிகள் போய்வர ஒதுக்கப்பட்ட சந்து என்றால் இல்லை, அது எங்களுக்குள்ளது, பட்டா காப்பி கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 14 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் கொடுத்துள்ளேன். தவறான முறையில் பெறப்பட்ட யூ.டி.ஆர் - ஐ பயன்படுத்தி பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க தவறான பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.